1973 நவம்பர் 23]

கொடுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கவனிப்பார்களேயானால், அது பல ஆண்டுகளுக்குக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பது தெரியும். அதையெல்லாம் அரசாங்கம் வழங்கியிருக்கிறது. தேவை ஏற்படும் நேரத்தில் நகராட்சிகளுக்கு தனி நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் உதவி செய்து, தேவையான உத்தரவை இடுகிறது. அவர்கள் 5 லட்சம் ரூபாய்க்கு பதிலாக 7 லட்சம் ரூபாய் கேட்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த அளவுக்குத்தான் செலவு செய்யலாமென்று உத்தரவிடப்பட்டிருப்பதால், நிரந்தரமாக ஒரு 'ஸ்டேன்டிங் ஆர்டர்' போட முடியாதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இங்கே உறுப்பினரவர்களும், மாண்புமிகு அமைச்சரவர்களும் லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து, நகராட்சிக்கு வருவதைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து நகராட்சித் தலைவராக வருவதற்கு சட்டத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டத்தில் இடம் இருந்தால், ஒத்துக் கொள்ளுவார்கள். நடப்பதைச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதைப்பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னதற்கு விளக்கம் சொன்னேன். அதிகம் செலவு செய்து பழக்கப்பட்டவன் அல்ல நான்.

Rest House for Pilgrims

* 87. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any new Rest House has been constructed at Madurai for pilgrims; and

(*b*) if so, the details thereof?

யாத்திரிகர்களுக்கு ஓய்வு இல்லம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான ஓய்வு இல்லம் ஏதும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மதுரையில் ஒரு புதிய தங்கும் விடுதி ரூ. 2,35,000 (இரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம்) செலவில் திரு. பிர்லா அவர்களுடைய நன்கொடையில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. திரு. பிர்லா அவர்களின் வேண்டுகோளின்படி அந்த விடுதிக்கு 'பிர்லா விஷ்ராம்' என்று பெயரிடப் பட்டுள்ளது. அந்த மாளிகை 15 தங்கும் அறைகளைக் கொண்டது.

Trustees for Arulmigu Sarangapani Temple, Kumbakonam

* 88. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether Sri Sarangapani Temple at Kumbakonam is without trustees; and

(*b*) if so, the reasons therefor?

அருள்மிகு சாரங்கபாணி ஆலய அறங்காவலர்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கும்பகோணத்திலுள்ள அருள்மிகு சாரங்கபாணி ஆலயம் அறங் காவலர்கள் இல்லாமலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) ஐந்து அறங்காவலர் களின் பதவிக் காலம் முடிவுற்றதால் தற்போது அந்தப் பதவிகள் காலியாக இருக்கின்றன. அந்தப் பதவிகளை நிரப்புவதற்குரிய பணிகள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அருள்மிகு சாரங்கபாணி ஆலயத்தின் மதில் சுவரை எடுத்துவிட்டு; கடைகளைக் கட்டிவிட்டார்கள் என்ற பிரச்சினை எழுப்பப்பட்டதே, அதைப் பற்றி அமைச்சரவர்களின் அபிப்ராயம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மதில் சுவரை இடித்து, கடைகள் கட்டியதைத் தவறென்று அரசு சுட்டிக் காட்டி, அந்த அறங்காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. கட்டியிருக்கும் கடைகளை நீக்கி, மீண்டும் மதில் சுவரைக் கட்ட ஆணை இடப்பட்டுள்ளது.